www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# இரண்டாம் இடைத்தேர்வு - 2024

8- ஆம் வகுப்பு

## தமிழ்

பதிவு எண்

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

குறிப்புகள் : 1. மாணவர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப்பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.

2. விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.

3. தேர்வெழுத நீலம் மற்றும் கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **7 X 1 =7**

1. காட்டிலிருந்து வந்த .............. கரும்பைத் தின்றன.
   அ) முகில்கள் ஆ) முழவுகள் இ) வேழங்கள் ஈ) வேய்கள்
2. பசியால் வாடும் .......... உணவளித்தல் நமது கடமை.
   அ) பிரிந்தவர்க்கு ஆ) அலந்தவர்க்கு இ) சிறந்தவர்க்கு ஈ) உயர்ந்தவருக்கு
3. கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..............
   அ) கயிற்றுக்கட்டில் ஆ) கயிர்க்கட்டில் இ) கயிறுக்கட்டில் ஈ) கயிற்றுகட்டில்
4. 'செம்மரம்' என்னும் சொல் ............. த்தொகை
   அ) வினை ஆ) பண்பு இ) அன்மொழி ஈ) உம்மை
5. திருமுறைகள் மொத்தம் எத்தனை? ............
   அ) 8 ஆ) 12 இ) 10 ஈ) 15
6. அரசரை அவரது ........... காப்பாற்றும்.
   அ) செங்கோல் ஆ) வெண்கொற்றக்குடை இ) குற்றமற்ற ஆட்சி ஈ) படை வலிமை
7. நன்று நன்று - என்பது எவ்வகைத் தொடர்?
   அ) எழுவாய்த் தொடர் ஆ) விளித்தொடர் இ) உரிச்சொல் தொடர் ஈ) அடுக்குத்தொடர்

**II எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். [12 வது வினா கட்டாய வினா]** **3 X 2 = 6**

8. ***விடைக்கேற்ற வினா அமைக்க.***
   அ) கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
   ஆ) தொகைநிலைத் தொடர் ஆறு வகைப்படும்.
9. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?
10. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
11. மண்பாண்டம், சுடுமண் சிற்பம் – ஒப்பிடுக.
12. "விடல்" என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

**III எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **3 X 2 = 6**

13. ***கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு நிரப்புக.***
    ***[இருந்து, காட்டிலும், உடன்]***
    அ) இடி ....... மழை வந்தது.
    ஆ) அருவி மலையில் ..........வீழ்ந்தது.
14. ***பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை அகரவரிசைப்படுத்துக.***
    படகம், தவில், கணப்பறை, பேரியாழ், உறுமி, உடுக்கை, தவண்டை, பிடில், நாகசுரம், மகுடி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

15. *சரியான இணைச்சொற்களை இட்டு நிரப்புக.*

*(மேடுபள்ளம், கல்விக்கேள்வி, போற்றிப்புகழப்பட)*

அ) சான்றோர் எனப்படுபவர் ....... களில் சிறந்தவர் ஆவர்.

ஆ) ஆற்று வெள்ளம் ...... பாராமல் ஓடியது.

16. *கலைச்சொல் தருக.*

அ) Drum

ஆ) Crafts

17. *சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*

அ) பால் ........... (குடி/பருகு)

ஆ) பூ ......... (கொய்/பறி)

**IV எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (20 வது வினா கட்டாய வினா).** **2 X 3 = 6**

18. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?

19. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.

20. "ஆற்றுதல்" எனத் தொடங்கி "நோன்றல்" என முடியும் பாடறிந்து ஒழுகுதல் பாடலை அடிமாறாமல் எழுதுக.

**V எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 X 3 = 6**

21. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

22. இரவு பகல் என்பது எவ்வகைத் தொடர் என விளக்குக.

23. சொல் என்றால் என்ன?

**VI எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **3 X 4 = 12**

24. இருப்பிடச்சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

25. என் பொறுப்புகள் .....

அ) கைவினைக் கலைகளுள் ஒன்றைக் கற்றுக் கொள்வேன்.

ஆ)

இ)

ஈ)

உ)

26. வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்பு நலன்களாக நீங்கள் கருதுவன நான்கை எழுதுக.

27. *பின்வரும் இணைச்சொற்களை வகைப்படுத்துக.*

*(விருப்புவெறுப்பு, காலைமாலை, கன்னங்கரேல், ஆடல்பாடல், வாடிவதங்கி, உள்ளும்புறமும், மேடுபள்ளம், நட்டநடுவில், பட்டிதொட்டி)*

| நேரிணை | எதிரிணை | செறியிணை |
|---|---|---|
| | | |

**VII விரிவான விடையளிக்கவும்.** **1 X 7 = 7**

28. அ) தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**********



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com